1981 பிப்ரவரி 7]

தொண்டியை சுற்றுலா மையமாக்கல் :

*வினா எண் 228—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

முகவை மாவட்டத்தில் உள்ள தொண்டியை சுற்றுலா மையமாக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்போது இல்லை.

திரு. ச. அங்குசாமி : தமிழ்நாட்டில் கடற்கரையை ஒட்டி பயணிகள் விடுதி உள்ள இடம் தொண்டி ஒன்றுதான். உல்லாசப் பயணமாக பள்ளி மாணவ, மாணவிகளும், கல்லூரி மாணவ, மாணவிகளும் உயர்தர அதிகாரிளும், வெளிநாட்டுப் பயணிகளும் வருகை தருகிறார்கள். ஆகவே, தொண்டியை ஒரு சுற்றுலாமையமாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கப்படுகிற நிதி வசதியைப் பொறுத்தவரை இப்போது தொண்டியை சுற்றுலா ஸ்தலமாக மாற்றுகிற அளவுக்கு அங்கே செலவிட நிதி வசதி இல்லை. இனிமேல் அதைப்பற்றி காலம் வருகிறபோது, நிதி இடம் தருகிறபோது பரிசீலனை செய்யப் படும்.

திரு. செ. சிவசாமி : பூம்புகார் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு தொண்டியும் பாண்டிய நாட்டுத் துறைமுகத்தில் முக்கியமானது. தற்போது அது சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. அந்தத் துறைமுகத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்வதோடு சுற்றுலா வாரியத்தின் மூலமாக அபிவிருத்தி செய்யவேண்டிய ஏற்பாட்டை மீண்டும் பரிசீலனை செய்ய, பரிவோடு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நிதி வசதி ஏற்படுகிறபோது அதனைப் பரிவோடு அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.